அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 6

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 11 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 - எழுதுதல்

### 1. மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.

1. பண்பாட்டின் உயர்வைக் காட்டுவது

☐ பணம் ☐ செல்வம் ☐ நாகரிகம்

2. ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய மெய்யெழுத்துகள்

☐ வல்லினம் ☐ இடையினம் ☐ மெல்லினம்

3. அப்பா அம்மா என்போர் பெற்றோர். அதுபோல் மாமா மாமி என்போர்

☐ நண்பர் ☐ உறவினர் ☐ கொள்ளுப்பேரர்

4. கவிதைகள் மனங்களை

☐ துன்புறுத்தும் ☐ அழிக்கும் ☐ ஈர்க்கும்

5. இலையின் காய்ந்து விட்ட நிலை

☐ பழுப்பு ☐ கொழுந்து ☐ சருகு

6. கல்வி கற்றவருக்குச் சிறப்பு, தெளிவாகப்

☐ பாடுதல் ☐ பதித்தல் ☐ பேசுதல்

7. ஆழிக்குமரன் ஆனந்தன் ஒரு

☐ வழக்கறிஞர் ☐ மருத்துவர் ☐ ஆசிரியர்

8. பெயர்ச்சொற்களின் வகைகள்

☐ ஐந்து ☐ ஆறு ☐ ஏழு

9. மகிழ்ச்சி என்ற சொல்லுக்கு ஒத்தபொருள்

☐ அழகு ☐ உவகை ☐ ஈகை

10. பனையிலிருந்து கிடைப்பது

☐ இளநீர் ☐ தேங்காய் ☐ நுங்கு

11. மன்னன், அம்பு, வானம் என்பன குறிக்கும் ஒரு சொல்

☐ கோ ☐ மா ☐ பா

12. எமது தாய்ப்பாலில் கலந்த மொழி எனக் கவிஞர் கூறுவது

☐ ஆங்கிலம் ☐ தமிழ் ☐ சீனம்

13. விழாக்களின் மூலம் வளரும் பண்பு

☐ சண்டை ☐ பகை ☐ ஒற்றுமை

14. தன்மை இடத்தைக் குறிக்கும் ஒரு சொல்

☐ நான் ☐ அவள் ☐ நீங்கள்

15. நாலடியார் என்பது ஓர்

☐ இலக்கணம் ☐ இலக்கியம் ☐ எண்

16. குழல் + இசை என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ குழலிசை ☐ குழல்லிசை ☐ குழல் இசை

17. நுண்கலைகளுள் ஒன்று

☐ நாடகம் ☐ வாசிப்பு ☐ படிப்பு

18. அவை என்ற சொல்லுடன் ‘ஐ’ சேர்த்து எழுதினால்

☐ அவற்றை ☐ அதை ☐ அவரை

19. வினா எழுத்துகளுள் ஒன்று

☐ ஏ ☐ அ ☐ உ

20. மாறாத தன்மை உடையது

☐ பண்பாடு ☐ உணவு ☐ உடை

(20 x 1 = 20 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. காடு ____________________________
2. ஆடை ____________________________
3. பண்பாடு ____________________________
4. தாயகம் ____________________________
5. நாடகம் ____________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.**

1. அப்பா செய்தித்தாளை வாசித்தார்.
2. நாம் மூத்தோரை மதித்துப் போற்றுவோம்.
3. ஆழிக்குமரன் ஆனந்தன் திறவினைகளைச் செய்தார்.
4. வளவன் நன்றாகப் படித்து, தேர்வை எழுதினான்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | நாம் | | |
| 3. | | திறவினைகளை | |
| 4. | | | |

(10 X 1 = 10 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொல்லை இடைவெளியில் வைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| உடற்பயிற்சி | முளையில் | |
| உயர உயர | கணீர் கணீர் | தாயகத்தில் |

1. எமது உறவினர் பலர் ____________________ வாழ்கிறார்கள்.
2. விளையும் பயிரை ____________________ தெரியும்.
3. கோவில் மணி ____________________ என ஒலித்தது.
4. நாம் ஒவ்வொரு நாளும் ____________________ செய்வோம்.
5. பருந்து ____________________ப் பறந்து சென்றது.

(5 X 2 = 10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. முற்காலத்தில் வாய்மொழிப் பாடல்களை எவ்வாறு அழைத்தார்கள்?

_______________________________________________

_______________________________________________

2. பூவின் மலர்ந்த நிலையின் பெயரை எழுதுக.

_______________________________________________

3. தமிழரது பண்பாட்டை அறிய உதவும் சான்றுகளுள் இரண்டை எழுதுக.

____________________ ____________________

4. தமிழில் உயிர்மெய்யெழுத்துகள் எத்தனை?

_______________________________________________

5. ஈழத்தையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது?

_______________________________________________

6. நான்கு திசைகளின் பெயர்களை எழுதுக.

____________________ ____________________

____________________ ____________________

7. அஃறிணைக்குரிய பால்கள் எவை?

_______________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**6. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வாழைமரம் வாழைமரம்
வழ வழப்பாய் இருக்கும் மரம்
சீப்புச்சீப்பாய் வாழைப்பழம்
தின்னத்தின்னக் கொடுக்கும் மரம்
பந்தி வைக்க இலைகளெல்லாம்
தந்திடுமாம் அந்த மரம்
காயும் பூவும் தண்டுகளும்
கறி சமைக்க உதவும் மரம்
கலியாண வாசலிலே
கட்டாயம் நிற்கும் மரம்

1. பந்தி வைக்க எவை உதவுகின்றன?

______________________________

2. வாழை மரம் எப்படி இருக்கும்?

______________________________

3. வாழைப்பழம் எப்படி இருக்கும்?

______________________________

4. வாழைமரத்தின் காயும் பூவும் தண்டுகளும் எதற்கு உதவுகின்றன?

______________________________

5. வாழைமரம் கட்டாயம் நிற்கும் இடம் எது?

______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. உறவைப் பேணுவோம்
2. பனை மரம்
3. தமிழிலக்கிய வரலாறு
4. எனது தமிழ் அறிவு

**உள்ளடக்கக் குறிப்புகள்**

- தமிழ் படிப்பதற்கான காரணம்
- தமிழ்ப்பள்ளியில் கற்பவை
- எனது பெற்றோரின் ஒத்துழைப்பு

(15 புள்ளிகள்)

# பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

வெளவால் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தது. அதன் இறக்கைகள் நீண்டிருக்கும். வெளவால்களின் கால்களுக்குப் போதிய வலிமை கிடையாது. அதனால், அவற்றால் நீண்ட நேரம் நிற்கவோ நடக்கவோ முடியாது. அத்துடன் மற்றப் பறவைகள் போல் வெளவால்களால் நிலத்திலிருந்து திடீரென மேலெழும்பிப் பறக்கவும் முடியாது. ஏனெனில், வெளவால்களின் வலிமை குறைந்த கால்களும் அதிக கனமான இறக்கைகளும்தான் இதற்குக் காரணம். எனவே, அவை மரங்களில் தலைகீழாகத் தொங்குகின்றன. வெளவால்கள் தொங்குவதால் தம்மைத் தாக்க வரும் விலங்குகளிடம் இருந்து காத்துக் கொள்கின்றன. இவ்வாறு தொங்கும்போது வெளவால்களுக்கு அதிகளவு வலிமை தேவைப்படுவதில்லை. அத்துடன் அவை உடனடியாகப் பறப்பதற்கும் எளிதாக உள்ளது. வெளவால்களைத் தாயகத்தில் அதிகமாகக் காணலாம்.

1. வெளவால்களை எங்கே அதிகமாகக் காணலாம்?

______________________________________________

______________________________________________

2. அவற்றின் கால்கள் எப்படிப்பட்டவை?

______________________________________________

______________________________________________

3. வெளவால் எந்த இனத்தைச் சேர்ந்தது?

______________________________________________

______________________________________________

4. வெளவால்களின் இறக்கைகள் எப்படி இருக்கும்?

______________________________________________

______________________________________________

5. அவை மரங்களில் எப்படித் தொங்குகின்றன?

______________________________________________

______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள பிறந்தநாள் அழைப்பு அஞ்சலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளமிடுக.**

அன்பு நண்பி எழிலிக்கு,

வணக்கம். நீங்கள் நலமாக இருக்கிறீர்களா? நான் உங்களை நேரில் காண ஆசைப்படுகிறேன். அதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. 06.04.2024 சனிக்கிழமை அன்று நான் எனது 10ஆவது பிறந்தநாளைக் கொண்டாட உள்ளேன். எனது பிறந்தநாள் விழாவுக்கு உங்களை அன்புடன் அழைக்கிறேன். உங்கள் பெற்றோரையும் அழைத்து வாருங்கள். உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
அன்பு நண்பி,
ஓவியா

1. பிறந்த நாளுக்கு அழைத்தவர் ஓவியா. (      )
2. இந்த விழா நடைபெறும் நாள் ஞாயிற்றுக்கிழமை. (      )
3. ஓவியா எழிலியைக் காண ஆசைப்படுகிறார். (      )
4. அஞ்சலை எழுதியவர் எழிலி. (      )
5. எழிலியும் ஓவியாவும் நல்ல நண்பிகள். (      )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |